சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

OS. No. 42/2021

பெயர் திரு. ஏழுமலை த/பெ. வரதன் நாள். 21.07.2025

**வாதி சாட்சி 2 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 1 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) வாதி மற்றும் 1 முதல் 6 பிரதிவாதிகளை எனக்கு நன்றாக தெரியும் என்று சொன்னால் சரிதான். அவர்கள் அனைவரும் என்னுடைய உறிவனர்கள் என்றால் சரிதான். வழக்குச் சொத்தின் புல எண் மற்றும் விஸ்தீரணம் எனக்கு தெரியும். வழக்குச் சொத்தின் புல எண்.715/6 மற்றும் விஸ்தீரணம் 28 சென்ட் ஆகும். புல எண்.715/6 என்னென்ன புல எண்களாக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். உட்பிரிவிற்குப் பிறகு யார் யார் பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றும் எனக்குத் தெரியாது என்றால் சரிதான். அந்த உட்பிரிவின்படி யார் யார் எத்தனை சென்ட் அனுபவம் செய்து வருகிறார்கள் என்று சொன்னால் சரிதான். அந்த 28சென்ட்டில் எந்த உட்பிரிவு எண்ணிற்கு குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்று சொன்னால் சரிதான். பாக்கியம்மாள் பிள்ளைகள் தேவராஜ் மற்றும் சுப்புராயன் பெயரில் ஆவணங்களை நான் பார்த்ததில்லை. அவர்கள் அடங்கல் கணக்குகளையும் நான் பார்த்ததில்லை. வாதிகள் பெயரிலும் அடங்கல் கணக்குளை நான் பார்த்ததில்லை. வாதிகள் எந்தெந்த புல எண்ணில் குறிப்பிட்டு அனுபவம் செய்து வருகிறார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனக்கு வழக்கு சொத்தை பற்றியோ வழக்கு பற்றியோ தெரியாது என்றாலும், வாதிகளுககு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. என்னுடைய சாட்சியம் ஏற்கக் கூடியதல்ல என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.